## In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 7/2025** **Date:03.02.2026.**

**(DW1)-** தங்கப்பன்

**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை

1. எனக்கும் இந்த வழக்கு வாதிக்கும் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான். எனக்கு வாதி தரப்பில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பபட்டது என்றால் சரிதான். அதில் குறிப்பிட்டுள்ள விபரங்களை நான் தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்துக் கொண்டேன். மேற்படி அறிவிபிற்கான பதில் அறிவிப்பு அனுபுவதற்கான சங்கதிகளை வழக்கறிஞருக்கு யார் தெரிவித்தார்கள் என்றால் நான் தான் தெரிவித்தேன். இந்த வழக்கின் எதிர் வழக்குரையும் நான் கூற எனது வழக்கறிஞரால் தயார் செய்யபட்டு தாக்கல் செய்யபட்டது என்றால் சரிதான். எனது மகன் பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைக்க நான் தான்முடிவு செய்தேனா என்றால் நான் தான் முடிவு செய்தேன்.

2. மேற்படி ஆவணம் தயார் செய்ய எழுத்தாளரை எத்தனை முறை பார்த்தேன் என்றால் முதல் முறை பத்திரம் கொடுக்கும் போதும் பின் பத்திரம் பதிவு செய்யும் போது தான் பார்த்தேன், எழுத்தர் பத்திரத்தில் ஒரு சிறிய இடையூறு இருப்பதாக தெரிவித்தார். நான் பிரான்சிஸ் என்பருக்கு எந்த வருடம் அடமானம் எழுதி கொடுத்தேன் என்றால் சுமார் 45 வருடங்களுக்கு முன்பு எழுதிக் கொடுத்தேன். அந்த அடமானத்தை மீட்ட விவரத்தை எனது எழுத்தாருக்கு தெரிவித்தேனா என்றால் நினைவில் இல்லை. அடமானத்தை மீட்ட விவரம் எனக்கு பதில் உறை தாக்கல் செய்யும் போதோ பதில அறிவிப்பு அனுப்பும் போதோ நினைவிற்கு வரவில்லை என்றால் சரிதான்.

3. மேற்படி அடமான பத்திரம் அடமான சொத்துக்களை பொறுத்த வரை வில்லங்கம் என்றால் சரிதான். ஒரு சொத்தின் வில்லங்கத்தை அகற்றாமல் வேறு ஒரு பத்திரம் பதிவு செய்ய முடியாது என்ற விபரம் தெரியும் எனக்கு என்றால் தெரியும். 23.03.1981 அன்று ஞானபிராகச நாடார் மகன் சிலுவை என்பவருக்கு நான் புல எண் 717/4 ல் உள்ள 14 செண்ட் சொத்தை ஆவண எண் 638/1981 ன் மூலம் உரிமை

மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தும் அடமான சொத்தின் உட்ப்பட்டது என்றால் சரிதான். ஆவண எண் 638/1981 ஆவணம் அடமானத்திற்கு பின்பும் அடமானம் மீட்டபதற்கு முன்பும் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ. 13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. மேற்படி வா.சா.ஆ.13 ஆவணத்தில் உள்ள முன் ஆவணத்தை நான் தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிரான்சிஸ் 2000 ஆம் ஆண்டில் இறந்து விட்டார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 13 ஆவணம் எழுதப்படும் போது சொத்தின் அசல் ஆவணம் யாரிடம் இருந்தது என்றால் என்னிடம் தான் இருந்தது. அதை நான் பிரான்சிஸ் இடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் பிரான்சிஸ் இறப்பதற்கு சிறிது நாட்களுக்கு முன்பு தான் அசல் ஆவணத்தை கொடுத்தார் என்று பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல, அவர் இறப்பதற்கு 25 நாட்களுக்கு முன்பு ஆவணத்தையும் ரூ. 2000/- பணத்தையும் கொடுத்தார்.

5. எனது மகனின் பெரில் வா.சா.ஆ. 3 ஆவணம் பதிவு செய்யதான் பிரான்சிஸ் என்பவரிடம் இருந்து ரசீது ஆவணம் ஆன வா.சா.ஆ. 2 தயார் செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இறந்த நபரின் பெயரில் பத்திர பதிவு செய்வது ஆள் மாறட்டம் என்றால் சரிதான். இறந்த நபர் பெயரில் வா.சா.ஆ.6 ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6, வா.சா.ஆ.2 ஆவணத்தை பார்த்துள்ளேனா என்றால் பார்க்கவில்லை. மேற்படி 2 ஆவணங்கள் குறித்து விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி 2 ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் அனைத்தும் என்னுடைய சொத்து என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை தான் நான் எனது மகனுக்கு எழுதிக் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். இறந்த நபரின் பெயரில் பதியப்பட்ட ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எனது சொத்துக்களை வைத்து ஏற்ப்படுத்தப்பட்டுள்ளதால் அது என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரிதான்.

6. இறந்து போன வாதிகளின் தகப்பானரை வைத்து கல்லத்தனமாக பத்திரம் ஏற்படுத்தியதால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்டால் பிரச்சனையை முடித்துக் கொள்ளாலாம் என்று தான் வாதிகள் வழக்கறிவுப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான், நான் பணம் கொடுத்துவிட்டேன் எனவே நான் மன்னிப்பு கேட்க முடியாது. மேற்குறிப்பிட்டவாறு கல்லத்தனமான ஆவணங்களை ஏற்ப்படுத்தினால் வாதிகளுக்கு வருத்தம் ஏற்படத்தான் செய்யும் என்றால் சரிதான்.

7. வா.சா.ஆ.3 ஆவணம் சட்டப்படி செல்லாத ஆவணம் என்றால் சரிதான் அது பணத்திற்காக வேண்டி எழுத்தர் செய்த வேலையாகும். நானே அனைத்து

தவறுகளையும் செய்துவிட்டு தற்போது எழுத்தர் மீது பலி சுமத்துகிறேன் என்றாலும் நான் தான் அனைத்து  தவறுகளையும் செய்தேன் என்றாலும் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு அனுமதிக்கதக்கது என்றாலும் எனது வழக்கு பொய்யானது என்றாலும் சரியல்ல. தற்போதும் நான் வருத்தம் தெரிவித்தால் வாதிகள் இந்த வழக்கை திரும்ப பெற்றுக்கொள்வதாக உள்ளார்கள் என்றால் நான் பணத்தை திரும்ப கொடுத்துவிட்டேன் எனவே நான் மன்னிப்பு கேட்க முடியாது.

# In the Court of the District Munsif, Eraniel

**Original Suit No. 64/2021** **Date:03.02.2026.**

**(DW1)- கிருஷ்ண பிரசாத்**

**வாதி** தரப்பு குறுக்கு விசாரணை

1.வழக்கின் முழு விபரம்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள எதிர் கோருரிமை மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் தெரியும். வாதி தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பற்றி விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும், அவர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் ஒரு சொத்தில் மட்டும் தான் எனக்கு பிரச்சனை. மேற்படி சொத்து எது என்றால் சர்வே எண் 227/7 ஆகும், மேற்படி சொத்து குடும்ப சொத்தாகும். மேற்படி சொத்து வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் சேர்க்கவில்லை. மேற்படி சொத்து தற்போது யார் கைவச அனுபவத்தில் உள்ளது என்றால் வாதி அனுபவத்தில் உள்ளது.

2. வா.சா.ஆ.4 வரைபடத்தில் வழி பாதையாக காட்டப்பட்டுள்ள இடம் சரியானது தான என்றால் சரியானது தான், அது எனது தந்தையின் காலத்திலேயே தெளிவாக தயார் செய்ப்பட்டது என்றால் சரிதான். அது கிடப்பிலும் வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ளது போலதான் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பாதை ஆனது எங்களது குடும்பற்த்திற்கான பொது பாதை என்றால் சரிதான். அதில் குடும்ப உறுப்பினர்களால் யாரும் எந்த இடையூறும் செய்யமுடியாது என்றால் சரிதான். வா.சா.ஆ.4 வரைபடத்தில் E என்ற குறிப்பிடப்பட்டுள்ள 30 செண்ட் இடம் எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 30 செண்ட் இடத்தில் எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்.

3. மேற்படி 30 செண்ட் இடத்திற்க மேற்கு பக்கம் உள்ள பொது பாதையில் நான் பள்ளம் தோண்டியும் ஒலை மட்டைகளை குவித்து வைத்தும் கற்களை போட்டு வைத்தும் கம்பி கட்டி மேற்படி பொது பாதையை இடையூறு செய்யததால் தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நான் எனது இடத்தில் தான் அவ்வாறு செய்துள்ளேன். நான் தோண்டியுள்ள பள்ளத்தை முடாமல் எனது இடத்தை கடந்து செல்ல முடியாது என்றால் சரியல்ல, பாதை வேறு இடத்தில் உள்ளது. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் மேற்படி விபரங்களை குறிப்பிட்டுள்ளது குறித்து எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் என்னுடைய சொத்தில் தான் ஒலை